# இயேசு காவியம் – பணக்காரனும் ஏழையும்

***முனைவர் கோ. எவாஞ்சிலின் ஜோன்ஸ் ஜாய்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
எத்திராஜ் மகளிர்கல்லூரி, சென்னை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6418

***ஆய்வுச் சுருக்கம்***

*ஐசுவரியமுள்ள ஒரு மனிதன் இருந்தார். அவர் மிகவும் விலையுயர்ந்த வஸ்திரம் தரித்திருந்தார். அனுதினமும் மிகவும் உல்லாசமாய் வாழ்ந்துக்கொண்டிருந்தார். லாசருஎன்னும்பெயருடையஒருதரித்திரனும் இருந்தார். அவர் ஐசுவரியனுடைய வீட்டின் வாசலருகே கிடந்து, அவர் மேசையில் இருந்து கொட்டுகின்ற உணவையாவது உண்டு வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தார். பிறகு ஒரு நாள் இருவரும் மரித்தனர். ஐசுவரியவான் எரிகின்ற நரகத்தில் தள்ளப்படுகின்றார். ஆனால் லாசருவோ ஆபிரகாம் மடியில் அமர்த்தப்பட்டு தேற்றப்படுகிறார். இதைக் கண்ட ஐசுவரியவான், ஆபிரகாமிடம் லாசருவை எனக்கு உதவ அருள்புரிய வேண்டுமென்று மிகவும் கதறுகிறார். ஆனால் ஆபிரகாமோ அவன் உதவ வரமுடியாது என்கிறார். நீ உலகத்தில் இருக்கும்போது மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்தாய். இப்பொழுதோ நரகத்தில் தள்ளப்பட்டுள்ளாய். இவனோ வாழும் உலகத்தில் வேதனை அனுபவித்தான். ஆனால் இப்பொழுதோ தேற்றப்பட்டுள்ளான் என்றார். மறுபடியும் ஐசுவரியவான் தன் சகோதரர்க்காக கதறுகிறார். ஆனால் ஆபிரகாமோ அங்கே தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள் அவர்கள் வழிகாட்டுவார்கள். அவர்களுக்கு செவிகொடுக்காவிட்டால் மரித்தோரிலிருந்து ஒருவன் வந்து கூறினாலும் செவிகொடுக்கமாட்டான் என்றார். ஆடம்பரமாக வாழ்ந்த ஐசுவரியவான் பிறருக்கு உதவாமல் சுயநலமாக வாழ்ந்து இறுதியில் நரகத்தில் வேதனையடைகிறார். ஆனால் ஏழையான லாசருவோ வாழ்வதற்கே வழியில்லாமல் வாழ்ந்தார். கடைசியில் இறைவன் மடியில் அமர பாக்கியம் கிடைத்தது.*

## முன்னுரை

இலக்கியமானது காலம் காட்டும் கண்ணாடி. மனிதனின் வாழ்வை மிகத் தெள்ளத் தெளிவாகக் காட்டக்கூடியதாக இலக்கியம் காணப்படுகின்றது. நாம் அனுபவிக்கும் அனைத்து பொருள்களும் நிலையற்றது. இறைவன் அன்பு மட்டுமே மாறாதது. நிலையில்லாத உலகப் பொருள்கள் மீது பேராசை கொள்ளாது இறைவன் மீது பற்றுடையவர் களாய் இருக்க வேண்டும்.

## ஐசுவரியவானின் ஆடம்பரம்

ஐசுவரியவான் என்கின்ற ஒரு மிகப் பெரிய பணக்காரர் ஒருவர் வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் உடையோ மிகவும் விலையுயர்ந்ததாயிருந்தது. அவர் அனுதினமும் வசதியாய் மிகவும் ஆடம்பரமாய் வாழ்ந்துக் கொண்டிருந்தார்.

**லாசருவின் ஏழ்மை**

ஐசுவரியவான் வீட்டின் வாசலில் ஒரு ஏழை லாசரு வாழ்ந்து கொண்டிருந்தார். அவரோ, இந்த ஐசுவரியவான் மேஜையில் இருந்து சாப்பிடும் போது, கீழே சிந்துகின்ற உணவையாவது உண்டு வயிற்றை நிரப்பலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தார். மிகவும் வறுமை அவரை வாட்டியது. இதைத்தான் கண்ணதாசன்,

**“செல்வன் தினமும் தின்று முடித்தபின்**
**அதிலே மிஞ்சும் அப்பத்தை யாவது**
**தின்னுவோமென்றே தெருவில் கிடந்தான்”**
***(இ.கா)***

என்ற இப்பாடல் வாயிலாக இயேசு காவியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**ஐசுவரியவானின் குணம்**

ஐசுவரியவான் மிகவும் வசதியுள்ள வராயிருந்தும் ஏழையின் மீது கொஞ்சம்கூட கருணையே இல்லை. அவர் யாருக்குமே எதையும் கொடுத்து உதவியது இல்லை.

**ஐசுவரியவான் தனக்காக கதறல்**

ஐசுவரியவான் பாதாளத்தில் வேதனைப்படும் போது தூரத்தில் ஆபிரகாம் மடியில் லாசரு அமர்ந்திருப்பதைக் காண்கிறார். நான் மிகவும் அக்கினி ஜீவாலையில் வெந்துக் கொண்டிருக்கிறேன். தயவுசெயது லாசருவை எனக்கு உதவ ஏற்பாடு செய்யுங்கள் என்று கதறுவதை,

“தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும். இந்த அக்கினி ஜீவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிடுகிறான்” (லூக். 16:24)

என்ற இந்த வசனம் வாயிலாக நற்செய்தியாளர் பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**தேற்றப்படுதல், தள்ளப்படுதல்**

பிறகு ஒரு நாள் இருவரும் மரித்தனர். ஐசுவரியவானாகிய நீயோ பூமியில் இருக்கும் காலத்தில் மிகவும் செல்வச் சீமானாக வாழ்ந்து பல நன்மைகளை அனுபவித்தாய். இப்பொழுதோ எரிகின்ற நரகத்தல் தள்ளப் பட்டுள்ளாய். ஆனால் லாசருவோ வாழ்கின்ற நாட்களில் கொடுமையைச் சந்தித்தான். பல இன்னல்களைச் சந்தித்ததால் இப்பொழுதோ பரலோகத்தில் ஆபிரகாம் மடியில் அமர்த்தப்பட்டுள்ளார் என்பதை,

**“ஏழை ஓர்நாள் இறந்து போனதும்**
**ஆபிரகாமின் அருகிலே அவனைச்**
**சேர்த்து வைத்தனர் தேவதூதர்கள்”**
***(இ.கா)***

என்ற இப்பாடலடியின் வாயிலாக கண்ணதாசன் ஏழை உயர்த்தப்பட்டதை தெளிவாகக் காட்டியுள்ளார். அதுமட்டுமல்லாமல் நீ இங்கேயோ அவன் அங்கேயோ வரமுடியாத படி பெரும் பிளவு உள்ளது என்பதை,

**“இவன் அங்கேயோ நீ இங்கேயோ**
**வருவதற் கெந்த வழியும் இல்லை**
**இகத்திலே நீயே சுகத்தைக் கண்டவன்**
**பரத்தில் இவனே வரத்தைப் பெற்றவன்**
**இது இவனுக்கு அதுதான் உனக்கு**
**என்றார்”*(இ.கா)***

என்னும் இப்பாடல் வாயிலாக கண்ணதாசன் பணக்காரன் கதறலைக் சுட்டிக்காட்டுகின்றார்.

**ஐசுவரியவான் தன் சகோதரர்க்காக கதறல்**

ஆபிரகாமே எனக்கு ஐந்து சகோதரர்கள் உள்ளனர். அவர்களாவது இந்த அக்கினிக்குள் வராதபடிக்கு இருக்க, லாசருவை என் தகப்பன் வீட்டிற்கு அனுப்பும் என்று கதறினார் என்பதை,

“தகப்பனே, எனக்கு ஐந்து பேர் சகோதரருண்டு. அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்திற்கு வராதபடி, அவன்போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி வேண்டிக் கொள்கிறேன் என்றான்” (லூக்.16:27,28)

என்ற வசனத்தின்படி நற்செய்தியாளர் குறிப்பிட்டுள்ளனர். இதனைக் கண்ணதாசன்,

**"எங்கள் வீட்டில் இருப்பவர்க் கெல்லாம்
அறிவுரை நல்க அவனை அனுப்புக
அவர்களும் என்போல் அவதி யுறாது
அங்கே வரும்படி ஆண்டவா செய்க"**

***(இ.கா)***

என்ற இப்பாடலடி வாயிலாக இயேசு காவியத்தில் காட்டியுள்ளார்.

### ஆபிரகாமின் பதில்

ஆபிரகாம் அந்தப் பணக்காரனைப் பார்த்து, அவர்களுக்கு உதவி செய்வதற்காக அங்கே தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்பதை,

"அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு. அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும் என்றார்." *(லூக். 16:29)* என்ற வசனம் வாயிலாக நற்செய்தியாளர் பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### ஐசுவரியவான் மீண்டும் கதறல்

தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிடமிருந்து ஒருவன் வந்து அவர்களிடத்தில்போய் சொன்னால் தான் மனந்திரும்புவார்கள் என்று மிகவும் கதறுகிறார் என்பதை,

**"இறந்தவர் இடத்தே இருந்தே ஒருவர்
சென்றால் நல்லது சிறப்புறும் தந்தாய்"**

***(இ.கா)***

என்ற இப்பாடலடியின் வாயிலாகக் கண்ணதாசன், செல்வந்தன் தன் சகோதரர்க்காக கதறுவதைக் குறிப்பிட்டுள்ளார்

### ஆபிரகாம் மறுபடியும் பதிலளித்தல்

அவர்கள் மோசேக்கும் தீர்க்கரிசிகளுக்கும் செவிகொடுக்கவில்லையென்றால், மரித்தவர்களிடமிருந்து ஒருவன் வந்து சொன்னாலும் செவிகொடுக்க மாட்டான் என்றார்.

### செல்வம் சேவைக்காகவே

கடவுள் நமக்கு செல்வத்தை தந்திருப்பார் என்றால் அதை நமக்கு என்று நாம் பதுக்கி வைத்துக்கொள்ளாமல் மற்றவர்க்கு நம்மால் முடிந்த அளவு கொடுத்து உதவ வேண்டும். ஆனால் அந்த பணக்காரனோ ஆரம்பரமாக வாழ்ந்து எவர் மீதும் அக்கரையின்றி சுயநலமாக வாழ்ந்தார். இறுதியில் அக்கினி கந்தகக் கடலில் துன்புற்று உழன்றார். அவ்வாறாக நாம் இருக்கக்கூடாது என்பதைக் கண்ணதாசன்,

**"செல்வம் என்பது செல்வதற் காகவே
சேர்த்துப் பதுக்குதல் தீமையில் தீமை
பத்திருந் தாலும் பகிர்ந்து கொடுத்து
வாழத் தெரிந்ததால் வானகம் திறக்குமே"**

***(இ.கா)***

என்ற இப்பாடலடியின் வாயிலாக இயேசு காவியத்தில் கூறியுள்ளார். பணம் நம்மிடம் இருக்கும்போது நாம் அதை நல்லவிதமாகப் பயன்படுத்த வேண்டும். கத்தி என்பது நல்லது தான். கத்தியைக் கொண்டு நாம் பழம், காய்கறி நறுக்குகிறோம். ஆனால் அதே கத்தி நமக்கு தீமையையும் தரக் கூடியதாய்க் காணப்படும். அது போலத்தான் பணம் நம்மிடம் இருப்பது நல்லது தான். ஆனால் பணத்தின் மேல் பேராசை வந்து விட்டால் நமக்கு தீயவையாக முடிந்துவிடும் என்பதை,

**"பணஆசை எல்லாத் தீமைக்கும்
வேராயிருக்கிறது"**

***(1தீமோ.6:10 )***

என்று பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது.

### கடவுளுக்குக் கடன் கொடுத்தல்

நாம் ஒருவருக்கு உதவி செய்யும்போது பிரதிபலன் எதிர்பார்க்காமல் உதவுவதே சிறந்தது. நாம் ஒரு ஏழைக்கு உதவி செய்தால் அதுதான் மிகவும் நல்லது. அவன் நாம் செய்த உதவிக்கு கைம்மாறாக நமக்கு திரும்ப எதுவும் தரமுடியாது, தரவும் மாட்டான். அப்படிப்பட்ட ஏழைக்கு உதவி செய்வதே சிறந்தது. ஆதலால் தான் பரிசுத்த வேதாகமத்தில்,

**"ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்" *(நீதி.19:17)***

என்ற வசனம் வாயிலாக நாம் ஏழைக்கு உதவி செய்வதை கடவுக்குக் கடன் கொடுப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இதனைத் தான் திருவள்ளுவர்,

**"வறியார்க்குஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து"**

***(கு.221)***

என்ற குறளில் ஒரு பொருளும் இல்லாத ஏழைக்குக் கொடுப்பதே ஈகை என்கிறார். மற்றவர்க்கு பொருள்கொடுப்பது எல்லாம் ஏதாவது பயன் எதிர்பார்த்துக் கொடுப்பது ஆகும் என்கிறார். மேலும் நன்மை செய்ய அறிந்தும் நன்மை செய்யாமல்போனால் அது பாவமாகக் கருதப்பட்டுள்ளது என்பதை,

**"நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது அதை செய்யத்தக்கவர்க்குச் செய்யாமல் இராதே"**

***(நீதி. 3:27)***

என்று பரிசுத்த வேதாகமத்தில் வசனம் மிகவும் தெளி வாகக் கூறியுள்ளது.

## முடிவுரை

நமக்கு இறைவன்பணம் கையில் கொடுத் திருப்பது நாம் சுயநலமாக வாழ்வதற்கு அன்று. நம்மால் முடிந்த அளவு மற்றவர்க்கு உதவ வேண்டும். இன்று நிறைய பணக்காரர்கள், கை நிறைய பணம் இருந்தும் மனதில் கொஞ்சம்கூட சமாதானம் அற்றவர்களாய் காணப்படுகின்றனர். இதற்கு காரணம் பேராசையே. ஆனால் கொஞ்சம் சம்பாதித்தாலும் அதில் மனநிறைவோடு இருக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஐசுவரியவான் மிகவும் வசதி படைத்தவன். ஆனால் அவனுக்கு மெய்யான சமாதானம் இல்லாததற்கு காரணம் பேராசையே. ஒருநாளாவது தனது வீட்டு வாசலில் உள்ள ஏழைக்கு உதவ வேண்டும் என்கின்ற எண்ணம் கடுகளவுகூட அவனுக்கு வரவில்லை. நாம் அனுதினமும் சேர்த்து வைத்த செல்வத்தை நமக்கு மட்டும் என்று வைத்துக்கொள்ளாமல் நமது பக்கத்தில் உள்ள ஏழைகளை நாம் நினைவு கூறுதல் மிக அவசியமானதாகும். அவ்வாறு நாம் ஏழைகளை நினைவுகூர்ந்தால் கடவுளும் நம்மை நினைவுகூறுவார் என்பதில் எவ்வித சந்தேகமில்லை. லாசரு வாழ்கின்ற நாட்களில் வேதனை அனுபவித்தபோதும் எந்தச் சூழ்நிலையிலும் ஐசுவரியவானை மனதளவில் நிந்திக்கவில்லை. ஆகையால் இறுதியில் மோட்ச வாழ்வு அடைந்தார். நாமும் மற்றவர்க்கு முடிந்த அளவுக்கு உதவி செய்து பரலோக வாழ்வு வாழ முயற்சி செய்வோம்.

## இணைப்புகள்


1. பரிசுத்த வேதாகமம் - நீதிமொழிகள்
2. பரிசுத்த வேதாகமம் - 1தீமோத்தேயு
3. பரிசுத்த வேதாகமம் - லூக்கா
4. திருக்குறள்
5. இயேசுகாவியம்